செ.வெ.எண்: 12/செப்டம்பர் நாள்:06.09.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## மண்டபம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் இன்று (06-09-2017) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பாக மேற்கொள்ளப்பபட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மண்டபம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட உடைச்சியார்வலசை கிராமத்தில் தன்னிறைவு திட்டத்தின் கீழ் பொதுமக்கள் பங்களிப்புடன் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டு வரும் திருமண மண்டபத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்பு இருமேனி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையுறுதித் திட்டத்தின் கீழ் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் குப்பானிவலசை தெற்கு ஊரணி ஆழப்படுத்தும் பணிகளையும், ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் மண்புழு உரக் கூடம் அமைக்கப்பட்டு வரும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்பின்பு மண்டபம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட முகுந்தராயர்சத்திரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி, தனுஷ்கோடியில் உள்ள மண்டபம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மற்றும் தாவுகாடு கிராமத்தில் உள்ள மண்டபம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு நேரடியாகச் சென்று மாணவ, மாணவியர்களின் வருகைப் பதிவேடு, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி உள்ளிட்டவற்றை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின் போது மண்டபம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.இளங்கோ, திரு.ராஜா, இராமேஸ்வரம் வட்டாட்சியர் திரு.ஆ.கணேசன், இராமேஸ்வரம் நகராட்சி ஆணையாளர் (பொ) திருமதி.தனலெட்சுமி உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**